# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2016/44 - 2017 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2017.04.28

*2016/44 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/2011*

**2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க,தேசிய பொது வழிகள் சட்டம்**

*2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொது வழிகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 89(2) (இ) ஆம் பிரிவின் கீழ், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கௌரவ லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2017, ஏப்பிறல் 28.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய பொது வழிகள் (பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை) (விசேட ஏற்பாடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஏதேனும் வகுதியின் பேருந்தொன்றைச் செலுத்தும் சாரதியொருவர் பின்வரும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக 2017 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணியிலிருந்து 2017 ஆம் ஆண்டின் மே மாதம் 1 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை பாவனையாளர் கட்டணக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் -

(அ) கொழும்பு - கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையைப் பயன்படுத்தல் தொடர்பில் 2015 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய 1912/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய பொது வழிகள் (கொழும்பு - கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை) ஒழுங்குவிதிகளின் 3 ஆம் ஒழுங்குவிதி.

(ஆ) தெற்கு பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை, காலி - மாத்தறை பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை மற்றும் வெளிச்சுற்றுவட்ட பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையின் கொட்டாவ - கடவத்தைப் பகுதியைப் பயன்படுத்துதல் தொடர்பில் 2015 ஆம் ஆண்டின் யூலை மாதம் 20 ஆந் திகதிய 1924/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய பொது வழிகள் (பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை) ஒழுங்குவிதிகளின் 3 ஆம் ஒழுங்கு விதி.

*5-410*


1A - PG 3509 — 107 (2017/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*